# A WORD OF ADVICE

**If You are ever in need of Pure Musk, Saffron, Shilajit, Hing, Pearls & Himalayan Drugs etc., etc.,**

**Never make Experiments with Un-Known and Un-Reliable Firms**

*Have your requirments from :—*

## KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA

*

# ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி, குங்குமப்பூ, சிலாஜித், பெருங்காயம், முத்து, ஹிமாலய மூலிகைகள் முதலியன உங்களுக்குத் தேவையானால்—

முன் பின்னறியாததும் நம்பிக்கையில்லாததுமான ஸ்தாபனங்களோடு ஒருபோதும் பரீக்ஷை செய்ய வேண்டா.

*

*உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:*

## கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams: AMRUTHAM P. B. 82 Phone: 2208

# The Arya Vaidya Pharmacy (Coimbatore) Limited.

## H. O.: Trichy Road, Coimbatore-1

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments.

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

Madras (Phone 85752), Cannanore (Phone 92), Palghat (Phone 195), Kozhikode (Phone 984), Ernakulam (Phone 494) Ponani (Phone 41), Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani.

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact:—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலை:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
31, சின்னக்கடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன,

*வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.*

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிர ஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள் இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

*விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.*

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, *மானேஜிங் டைரெக்டர்*

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி

**கீழ் ராஜவீதி, — புதுக்கோட்டை.**

கிளை — பொன்னமராவதி.

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்
குழந்தை வைத்ய நிபுணருமான
ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

## ஸ்ரீ. P. விச்வனாத சர்மா

அவர்களின்
மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்
விசேஷமாக சிசு நோய்களுக்கும்
ஆயுர்வேத முறைப்படி
சிறந்த சிகித்ஸை அளிக்கப்படுகிறது

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

N. வைத்யனாதன்.
உதவி வைத்யர்.

P. விச்வனாத சர்மா
பிரதான வைத்யர்.

10 JUN 1961


# வைத்ய சந்த்ரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 23 | பிலவ – வைகாசி, ஆனி. | பகுதி 6 |
| Vol. 23 | JUNE 1961 | No. 6 |


आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

## ஆயுர்வேத பட்டப் படிப்பு காலேஜ்.

ஆயுர்வேத பட்டப்படிப்பிற்கான காலேஜ் ஒன்றை ஆரம்பிக்கத் தமிழ்நாடு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. பல வருஷங்களுக்கு முன்பு அமுலிலிருந்த பி. ஐ. எம். பட்டப் படிப்பு போல் இது அமையு மென்று தெரிகிறது. ஜூலை மாதத்தில் இந்த காலேஜ் ஆரம்பமாகும்

புதிய ஆயுர்வேத காலேஜ் சென்னையில் ஆரம்பிப்பதா அல்லது வெளியூரில் ஆரம்பிப்பதா என்பது பற்றி அரசாங்கம் முடிவு செய்யவில்லை. பூந்தமல்லி ஹைரோட்டிலுள்ள ஊழியர் ராஜாங்க இன்ஷ்யூரன்ஸ் ஆஸ்பத்திரிக்காக புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இந்த ஆஸ்பத்திரி புதிய கட்டிடத்திற்குப் போய் விட்டால் அதன் பழைய கட்டிடத்தை ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அரசாங்கம் கருதுகிறது. இதற்குள் வெளியூர்களில் சரியான கட்டிட வசதி கிடைக்குமானால் அங்கு ஆரம்பிக்கலாமென்று கூறப்படுகிறது எபபடியும ஓரிரண்டு வாரங்களில் முடிவு தெரியலாம்.

# ப்லீஹோதரத்தில் கடுகெண்ணெய்.

[வைத்ய ரணஜிதராய்]

[ஸசித்ர ஆயுர்வேத பத்திரிகையில் ஆசிரியர் ராய் அவர்கள் காசியபஸம்ஹிதையில் காணப்படும் பல அபூர்வ விஷயங்களை ஆராய்ந்து தொடர்ந்து எழுதிவருகிறார். அத்தொடரின் 14-வது கட்டுரையாக வெளிவந்த இந்த விஷயம் நமது வாசகர்களின் கவனத்திற்குக் கொணரப்படுகின்றது. முன்னோர்களின் நூல்களில் ஆங்காங்கு புதைந்து கிடக்கும் பல அரிய விஷயங்களை ஆழ்ந்து சிந்தனை செய்து விளக்கித் தரும் அன்னாரது கட்டுரைகள் வைத்யர்களால் பெரிதும் போற்றப்படுபவை. கடுகெண்ணெய் பற்றிய அக்கட்டுரையை இங்கு தமிழாக்கித் தருகிறோம். — ஆசிரியர்.]

கடுதைலகல்பம் என்ற பெயரிலே காசியபஸம்ஹிதையில் கல்பஸ்தானத்தில் ப்லீஹோதரத்தில் கடுகெண்ணெய்யை உபயோகிப்பதுபற்றிய விவரத்தைக் காண்கிறோம். அதன் முதன் ச்லோகம் பின் வருமாறு:—

कटुतैलोपदेशं तु वक्ष्यामि प्लीहनाशनम् ।
न ह्यतः परमं किञ्चिदौषधं प्लीहशान्तये ॥

ப்லீஹா என்பது ப்லீஹம் எனும் மனிதனின் இடதுவிலாவினுட்புறத்திலுள்ள மண்ணீரல் கெட்டு ஏற்படும் உதர நோயைக் குறிப்பிடுகிறோம். இதன் சிகித்ஸையில் கடுகெண்ணெய்யை விடச் சிறந்த மருந்து கிடையாது என்கிறார் கச்யபர். இந்த விஷயம் கவனிக்கத்தக்கது.

அனேகமாக ப்லீஹ விருத்தி ஏற்பட்டு அதனால் உதரம் ஏற்படும்போது மருந்துகளால் வயிற்றிலுள்ள நீர் வற்றிய பின்னரும் பருத்த மண்ணீரல் சுருங்குவதில்லை. இந்நிலையில் சிகித்ஸையில் கடுகெண்ணெய்யின் உபயோகம் பரீக்ஷித்துப் பார்க்கத் தகுந்தது.

சரக ஸுச்ருத நூல்களில் கடுகெண்ணெய்யின் குணங்கள் பின்வருமாறு கூறப்படுகின்றன.

ரஸத்திலும் விபாகத்திலும் கடு (உரைப்பு).
வீர்யத்தில் உஷ்ணம், ஸ்நிக்தம் லகு.

குணத்தில் கபவாதங்களைக் குறைப்பது, பித்தத்தை அதிகப்படுத்துவது, பித்தத்தைக் கெடும்படி செய்வது, சுக்கில தாதுவைக் குறைப்பது, ரக்தத்தை கெடும்படி செய்வது, கண்களுக்கு இதமாகாதது, கிருமி, குஷ்டம், அரிப்பு, கட்டி இவைகளைக் குணப்படுத்தக்கூடியது.

ப்லீஹா எனும் மண்ணீரல் ரத்தத்திற்கும் பித்தத்திற்கும் இருப்பிடமாகும். பித்தத்தைப் பிரகோபமடையச்செய்யும் கடுகெண்ணெய் மண்ணீரல் பருத்து வருவதை எவ்விதம் குறைக்கும்? என்ற சந்தேகம் ஏற்பட வழியுண்டு. இதற்கு சமாதானம் பின்வருமாறு :—

வாயுவோ பித்தமோ கபமோ பிரகோபமடைந்து கோஷ்டத்திலுள்ள தன்னிருப்பிடத்தை விட்டு தாதுக்களாகிற சாகையை அடைந்து அங்கு வியாதியை உற்பத்திசெய்யும் போது அவ்விதம் சாகையை அடைந்த தோஷத்தை மறுபடியும் கோஷ்டமாகிற தன் ஸ்வஸ்தானத்திற்குக் கொணர்வதே சிகித்ஸையின் முதல் வழி.

காமலையில் இவ்வகை சிகித்ஸையைக் காண்கிறோம். காமலையில் பித்தம் தன்னிருப்பிடமான குடலை விட்டு சாகையான ரஸரக்தாதிகளில் ஸஞ்சரிக்கையில் அதற்கு சிகித்ஸையை வகுக்கும் ஆசாரியர் சரகர் பின்வருமாறு கூறுகிறார் :—

मातुलुंगरसं क्षौद्रपिप्पलीमरिचान्वितम् ।
सनागरं पिबेत्पित्तं तथास्यैति स्वमाशयम् ।
कटुतीक्ष्णोष्णलवणैर्भृशाम्लैश्चाप्युपक्रमः ।
आपित्तरागाच्छकृतो वायोश्चाप्रशमाद्भवेत् ।

(சரக சிகித்ஸை 16 அத்)

திப்பிலி, மிளகு, சுக்கு இவைகளின் சூரணத்தை தேன், துறிஞ்சிச்சாறு விட்டுச் சாப்பிட சாகையிலுள்ள பித்தம் தன்னிடத்திற்கு வரும் உரைப்பு தீக்ஷ்ண வீர்யம் உஷ்ண வீர்யம் உப்பு புளிப்பு மிகுந்த உணவுகளைக்கொண்டு சிகித்ஸை செய்ய குடலிற்குப் பித்தம் திரும்பி மலம் மஞ்சள் நிறமடைந்தும் வாயு சமனமடைந்தும் குணம் கிட்டும் என்கிறார். இந்த சிகித்ஸையால் நேரிடையாக கபத்தைக் குறைக்கும் சிகித்ஸை நடப்பதால் ஹிருதயத்தின் மந்தம், பலவீனம் முதலிய தோஷங்கள் நீங்கி வியாதி கடுமையான நிலையை அடையாது

குணமடையும். மற்றொன்று — திரிகடுவின் உபயோகம் பித்தத்தை குடலினுள் அதிகமாகச் செய்கின்றது. பித்தத்தைக் குடலில் அதிகப்படுத்தும் அளவில் திரிகடுவின் அளவும் அமையவேண்டும். இல்லாவிடில் பயன் கிட்டாது. இதற்காக வேளைக்கு ¼ தோலா வீதம் 3 நேரமாவது கொடுக்கவேண்டும். திரிகடு சூரணம் சாப்பிடத் தகுந்த அளவில் துறிஞ்சிச்சாறும் தேனும் கொடுக்கலாம்.

இந்த உதாஹரணத்தை யொட்டியே கடுகெண்ணெய்யின் உபயோகத்தில் ஏற்படும் சந்தேகத்தையும் ஸமாதானப்படுத்திக் கொள்ளவேண்டும். கடுகெண்ணெய் பித்தத்தைக் கிளப்பி விட்டு குடலிற்குள் கொண்டு சேர்க்க வல்லது. அதனால் மண்ணீரலில் குமைந்துள்ள பித்தம் குறைந்து அங்கு குணம் கிடைக்கும்.

இந்த முன்னுரையுடன் கசியபரின் கடுதைல கல்பத்தைக் கவனிப்போமாக :—

ப்லீஹோதரமுள்ளவன் பலவானாக இருந்தால் உபத்திரவங்கள் வேறொன்றுமில்லாவிடில், முதலில் கல்யாணகிருதம் அல்லது ஷட்பலகிருதம் சாப்பிட்டு ஸ்நேஹனம் செய்துகொள்ளவேண்டும். பிறகு கடுகெண்ணெய்யைச் சாப்பிடவேண்டும். நோயாளிக்கு பத்யமான உணவு நடவடிக்கை முதலியவைகளை அமைத்துக் கொடுக்கவேண்டும். எண்ணெய்யின் அளவு, இடைவிடாது உபயோகம், உணவு இவைகளையொட்டி ஐந்து முறைகள் உள்ளன.

கடுகெண்ணெய் உட்கொள்ளும் அளவு: அதிக அளவு 48 தோலா (24 அவுன்ஸ்). நடு அளவு 24 தோலா, கடைசி அளவு 16 தோலா, அல்லது அளவை நோயாளியின் குடல் சக்திக்கேற்ப அமைத்துக் கொள்ளலாம்.

இவ்விதம் ஸ்நேஹபானம் செய்தபின் இரவு கண்விழித்தல், காற்றில்லாத இடத்தில் வசித்தல், நெருப்பிடம் நெருங்கியிருத்தல், வெட்டவெளியில் வசித்தல் போன்ற பித்தப் பிரகோபத்திற்கான செய்கைகளைக் கையாளலாம்.

கடுகெண்ணெய்யைச் சாப்பிட்டதும் மூன்று நிலைகள் ஏற்படும். சாப்பிட்டவுடனேயே குமைச்சல் எரிவு கலந்த ஒரு கடும் வேதனை ஏற்படும். சிறிது நேரம் கழித்து எண்ணெய் ஜீரணமாகும்போது

அயர்வு ஏற்படும். ஜீர்ணமான பின்னர் சுத்தமான ஏப்பமும் தெளிவும் உடல் இலேசாகுதலும் உண்டாகும்.

எண்ணெய் சாப்பிட்டதும் அதிகமாக பேதியானால்; உடலும் இளைத்திருந்தால், தெளிவான கஞ்சி முதலியதைக் கிரமமாகக் கொடுக்கலாம். பேதி சரியாக ஆகாமலும், நோயாளி பலமுள்ள வனுமாக இருந்தால் அவனுக்கு லகுவான அன்னம் முதலியதையே கொடுக்கலாம்.

பிறகு முள்ளிலவம்பட்டை (ரோஹிதகம்) யின் கஷாயம் அல்லது வாழைக்கிழங்கின் சாறு சேர்த்து கஞ்சி தயார் செய்து நெய்யும் புளிப்பும் சேர்த்துக் கொடுக்கலாம். தயிர் தெளிவு, புளித்த மோர், புளியாரை, புளிப்பு மாதுளை, மிளகு, ஓமம் இவைகளைச் சேர்த்துத் தயாரித்த மோர்க் கஞ்சி மிகவும் நல்லது. சரியானபடி பலம் வரும்வரை புளிப்பான பழவகை சேர்த்தும் கடுகெண்ணெய் யால் தாளிதம் செய்தும் உணவு கொடுத்து வரவும்.

(1) ப்லீஹோத்ரத்தில் எரிச்சல் மிகுந்து காணப்பட்டால், கடுகெண்ணெய்யில் திராக்ஷை, குமிழம்பட்டை அல்லது காய், அதிமதுரம், வெட்டிவேர், விலாமிச்சைவேர், சந்தனம் இவைகளை பிரக்ஷேபமாகப் போட்டுப் பால் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கலாம். இது கொடுத்து ஜீர்ணமாகி சுத்தமான ஏப்பம் வந்ததும் வென்னீர் விட்டுக் குளித்த பின்னர், கடுகெண்ணெய்யில் வறுத்துத் தயிர் விட்டரைத்த கடுக்காயைச் சாப்பிடலாம். அரிசி உணவு, முன் கூறிய மோர்க் கஞ்சி இவைகளைச் சாப்பிட நெஞ்செரிவு அடங்கும், நெஞ்செரிவு குறையாவிடில் கல்யாணகிருதம் சாப்பிடவும்.

(2) மீன், தயிர், உளுந்து, பால், முள்ளிலவம்பட்டை க்ஷாரம் இவைகளைப்போட்டு கடுகெண்ணெய்யும நெய்யும் காய்ச்சவும். இது தைலகிருதம் எனப்படும். ப்லீஹோதரம், குல்மம் இரண்டும் இதனால் குணமடையும். தீபனம், பலமளிக்கும், கிரஹணி, விலா வலி இவைகளும் குணமடையும்

(3) **கர்ணிகாரதைலம்:** சரக்கொன்னைப் பட்டை 400 தோலா எடுத்து 25 படி ஜலத்திலிட்டுக் கஷாயமாக்கி நான்கில் ஒரு பங்கு மீதமாக்கி வடிகட்டி 6¼ படி பால் சேர்த்துக் கடுகெண்ணெய் 64 தோலா, தயிர் 64 தோலா, உளுந்தின் கஷாயம் 64 தோலா, தசமூலம் முள்ளிலவம் பட்டை இவைகளின் கஷாயம், க்ஷாரங்கள், ஜீவனீய கணம், இந்துப்பு இவைகளைக் கலகமாக்கிக் கொள்ளவும். இந்தத்

தைலம் காய்ச்சி சாப்பிட, ப்லீஹோதரத்தில் மிகவும் நல்லது. இதைச் சாப்பிடும் போது தேய்த்துக் குளித்தல், பிரும்மசர்யம், ஸுகமான தூக்கம் முதலியவை நல்லது. கவலை பயம் அஸூயை முதலியவைகளை விலக்கவும். இடதுபுறமாகப் படுப்பது, தயிர், மீன், லகுவாயும் ஸ்நிக்தமாயுமுள்ள உணவு மிகவும் நல்லது.

(4) சரக்கொன்னைப் பட்டையின் கல்கம், சூர்ணம் அல்லது சாறு எடுத்து கடுகெண்ணெய் சேர்த்துக் குழப்பி மோர் அனுபானத்துடன் சாப்பிட ப்லீஹோதரம் குறையும்.

வெண்கடுகிலிருந்து எடுக்கும் எண்ணெய்யைப் பற்றியே இது காறும் கூறப்பட்டுள்ளது. இதேமாதிரி செங்கடுகிலிருந்து எடுத்த எண்ணெய்யையும் உபயோகிக்கலாம். தயிர், உளுந்து, நீர் வாழ் பிராணிகளின் மாம்ஸம் முதலியவைகளின் உணவு நல்லது.

செங்கடுகு 1 பிடி (4 தோலா) எடுத்து அரைத்துக் காடியிலிட்டு உப்பும் க்ஷாரமும் போட்டுக் கலந்து சாப்பிட்டு மோர்க்கஞ்சி சாப்பிட பருத்த மண்ணீரல் உடன் குறையும். (கடுகின் அளவை ஸமயோசிதம் போல் கூட்டவும் குறைக்கவும் கூடும். க்ஷாரங்களில் முள்ளங்கி, நீர்முள்ளி முதலிய யக்ருத் பிலீஹங்களில் பயன்படும் க்ஷாரங்கள் நல்லவை), இவ்விதம் சாப்பிடும் போது எரிச்சல் அதிகமாகக் காணப்பட்டால் மாம்ஸரஸமும் க்ஷீரமும் நிறையச் சாப்பிடவும்.

*இதுவரை விருத்த ஜீவகரின் காசியப ஸம்ஹிதையில் காணப்படும் கடுகு கல்பம் இங்கு குறிக்கப்பட்டுள்ளது. தீரத்துடன் கையாண்டு வர நல்ல குணமளிக்க வல்லது.*

---

ஸ்ரீரங்கம் ஸ்ரீலக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத
தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

மே மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 666 | 1732 |
| பெண்கள் | 654 | |
| சிறுவர் | 412 | |

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் பண்ணை,

# சிறுநீரின் ஆமபக்வநிலைகள்.

[வைத்ய. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.].

(மே மீ இதழின் தொடர்ச்சி.)

## 3. ஆமகாரணமான அக்னிமாந்த்யம்.

சென்ற இதழில் மூத்திரஸம்வஹன மார்க்கத்தில் ஸம்வஹனத்தின் போது ஏற்படும் பிரகிருதி விகிருதி நிலைகளைப் பற்றி ஆராய்ந்தோம். ஸம்வஹனத்தின் முதல்மார்க்கமான கோஷ்டமே சிகித்ஸைக்கு அதிஷ்டானமாயிருப்பதால் ஆயுர்வேதத்தில் மூத்திரோத்பத்தி பக்வாசயத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தன் அனுபவ யுக்திகளுடன் கூடிய பெருமையையும் முன்னர் குறிப்பிட்டாயிற்று. மூத்திர ஸம்வஹனத்தில் ஆரம்பஸ்தலமான பக்வாசயத்தில் உண்ணும் உணவில் திரவ மலமாகப் பிரிக்கக்கூடிய அம்சத்தில் ஆமக்கலப்பு ஏற்பட்டு உள்சேர அதனால் ஸ்ரோதோரோதம் முதலிய கெடுதிகள் விளையலாம் என்ற முக்கிய விஷயத்திற்கான அடிப்படையில் பிரியும் திரவமலத்தில் ஆமக்கலப்பிற்கு முக்கிய காரணம் என்ன என்பதை இந்தக் கட்டுரையில் சற்று ஆராய்வோம்.

**सर्वेऽपि रोगा मन्देऽग्नौ.**

அக்னி மந்தமே ரோகங்களின் முக்கிய காரணம் என்பது ஆயுர்வேத சித்தாந்தம்.

அக்னிமாந்த்யம், மந்தாக்னி, அக்னி துஷ்டி என்று பல பெயர்களிலே அக்னிமந்தத்தைக் குறிப்பிடுவர் இங்கு ஒரு சந்தேக மெழலாம்.

அவனவன் தேகவாகை உணர்த்தும் பல்வேறு அமைப்புகளில் குடலிலுள்ள ஜாடராக்னியும் முக்கியப் பங்கு எடுத்துக் கொள்ளுகின்றது. வாதப் பிரகிருதியான மனிதனுக்கு விஷமமாகவும், பித்தப் பிரகிருதிக்குத் தீக்ஷ்ணமாகவும், கபப் பிரகிருதிக்கு மந்தமாகவும் ஸமப்பிரகிருதிக்கு ஸமமாகவும் அக்னி இருக்கும். இந்த அமைப்பிலே காணப்படும் மந்த அக்னிக்கும் வாயு— பித்தம்— கபம் இம்மூன்றாலும் அக்னிக்கு சக்தி குன்றுவதால் ஏற்படும் மந்த அக்னிக்கும் வேற்றுமை உண்டா? இரண்டையும் •பிரித்தறிவதெப்படி? இயற்கையாகவே கபப் பிரகிருதிக்கு அக்னி மந்தமாக இருக்குமேயாகில் அவனுக்கு நின

மும் நோய் ஏற்பட்டுக் கொண்டுதானே இருக்கவேண்டும்? அதனால் கபப்பிரகிருதி நோயாளியாகவே தான் இருப்பானா?

• இந்தக் கேள்விகளுக்குச் சரகரும் சக்ரபாணியும் ஒரு சமாதானமளித்துள்ளார்கள்.

வாதப்பிரகிருதிக்கு அக்னி விஷமமாகவே எக்காலத்திலுமிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை வாதப்பிரகிருதிக்கு அக்னியின் இருப்பிடமான கிரஹணியில் வாயுவால் கேடு நேர்ந்தால்தான் விஷமமான அக்னியாகின்றது. இவ்விதமே கபப்பிரகிருதிக்கு கபத்தால் கிரஹணி கெட்டால்தான் மந்தாக்னியாகும்.* ஆக கபப்ரகிருதியுள்ள மனிதனுக்கு அவனது ஜீர்ண உறுப்புகள் (அக்னி அதிஷ்டானம்) அவனது பிரகிருதியை உண்டாக்கிய கபத்தால் ஆக்கிரமிக்கப்பட்டால்— கெடுக்கப்பட்டால் அப்போது அவனது அக்னி மந்தமாகிறது. ஆனால் பொதுவாக கபத்தால் அக்னி அதிஷ்டானம் கெட்டாலே அக்னி மந்தமாவதற்கும் இதற்கும் என்ன வேற்றுமை எனக் கேள்வி எழலாம். கபப் பிரகிருதியானவனுக்கு மிகச் சிறிய தவறும் கபத்தை அதிகப்படுத்தவோ பிரகோபமடையச் செய்யவோ காரணமாகும். அத்துடன் பிரகிருதியின் காரணமாக அஹிதமான ஆஹார விஹாரங்களில் விருப்பம் ஏற்படுமாகையாலே அந்த அந்த பிரகிருதியை உண்டாக்கும் தோஷம் அனேகமாக அதிகமாகும் நிலையிலேயே இருக்கும். அதன் காரணமாக கபப் பிரகிருதியால் மந்தமாகவும், வாதப்பிரகிருதியால் விஷமமாகவும், பித்தப்பிரகிருதியால் தீக்ஷ்ணமாகவும் அனேகமாக அமையும். இது ஜடர அக்னிக்கு பிரகிருதி அமைப்பில் ஏற்படும் மந்த-தீக்ஷ்ண-விஷம நிலைகளுக்குள்ள விளக்கமாகும். இந் நிலைகளைப் பற்றிய மற்றொரு விளக்கம் அஷ்டாங்கஸங்கிரஹத்

---

* वातलानां तु वाताभिभूतेऽग्न्यधिष्ठाने विषमा भवन्त्यग्नयः। पित्तलानां तु पित्ताभिभूते ह्यग्न्यधिष्ठाने तीक्ष्णा भवन्त्यग्नयः। श्लेष्मलानां तु श्लेष्माभिभूतेऽग्न्यधिष्ठाने मन्दा भवन्त्यग्नयः।

(சரக—விமானஸ்தானம் 6 அ.)

இங்கே உரையாசிரியர் சக்ரபாணியின் குறிப்பு கவனிக்கத்தக்கது.

वाताभिभूतेऽग्न्यधिष्ठाने इति वचनेन वातलानामपि यदैवाग्न्यधिष्ठानोपघातो वातेन क्रियते, तदैव वैषम्यं भवति। एवं पित्ताभिभूत इत्यादावपि व्याख्येयम्।

தில் காணப்படுவது இங்கு குறிப்பிடத் தக்கது.* அதாவது ஜடராக்னி ஸமநிலையில் இருந்தால் உணவு நான்கு யாமத்திலும் மருந்து இரண்டு யாமத்திலும் ஜீர்ணமாகி விடும். தீக்ஷ்ணமாக இருந்தால் இதைவிட சீக்கிரமாகவும் மந்தமானால் மிகவும் தாமதமாகவும் ஜீரணமாகும். இந்த லக்ஷணமும் பிரகிருதியில் மந்த அக்னிக்கும் தோஷங்களால் தாத்காலிகமாக மந்த நிலையை அடைந்ததற்கும் பொருந்தும். தேகவாகின் ஒரு லக்ஷணமாகக் குறிப்பிட்டுள்ள அக்னிமந்தத்தை மந்தாக்னி என்றும், பல்வேறு காரணங்களால் வாயுவாலும் பித்தத்தாலும் கபத்தாலும் ஏற்படும் அக்னிமந்தத்தை அக்னிமாந்த்யம் என்றும் குறிப்பிடுவது மிகவும் உகந்தது.

கபத்தால் அக்னி மந்தமாகலாம். அக்னிக்கு விபரீதமான குணங்கள் கபத்தில் இருக்கின்றன. ஆனால் அக்னிக்கு நேரிடையாக உதவும் குணமுள்ள வாயுவும் அக்னிக்கு ஸமகுணமுள்ள— அக்னியே இதுவென குறிப்பிடப்படும் பித்தமும் அக்னிமந்தத்திற்கு எவ்விதம் காரணமாகலாம் என்பதையும் ஆசாரியர்கள் விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.† வாயு

* यामैश्चतुर्भिः द्वाभ्यां च भोज्यभैषज्ययोः समे ।
पाकोऽग्नौ युक्तयोर्द्राक्तु तीक्ष्णे, मन्दे पुनश्चिरात् ॥
(அஷ்டாங்கஸங்கிரஹம ஸூத்ர 11 அத்.)

† वातादयः प्रकुप्यन्ति तेषामन्यतमो यदा ।
मन्दीकरोति कायाग्निं, (காசியபஸம்ஹிதை. அம்லபித்த சிகித்ஸை.)
पित्तं ... द्रवत्वादग्निमुपहत्य (சரகர். ஜ்வரநிதானம்.)

द्रवत्वादग्निमुपहत्येति वचनादुष्णस्यापि पित्तस्य द्रवत्वेनाग्निविपरीतेन गुणेनाग्निहन्तृतां दर्शयति । (சக்ரபாணி.)

पित्तं द्रवत्वादूष्माणमुपहत्य (சரகர் அதிஸார சிகித்ஸை.)

यद्यपि पित्तमुष्णमग्नेः समानतया वर्धकं भवति इति युज्यते तथापि द्रवत्वादूष्माणमग्निरूपं हन्तीति भावः। (சக்ரபாணி)

कट्वजीर्णविदाह्यम्लक्षाराद्यैः पित्तमुल्बणम् ।
अग्निमाप्लावयद्धन्ति जलं तप्तमिवानलम् ॥
(சரக கிரஹணீ சிகித்ஸை.)

आप्लावनं द्रवेणार्द्रीकरणम्। उष्णस्यापि द्रवतया अग्निनिर्वापणे दृष्टान्तमाह- जलं तप्तमित्यादि— (சக்ரபாணி.)

அதிகமாகி அக்னி ஒரு சமயம் அதிகமாகியும் ஒருசமயம் சக்தி குன்றியும் ஆகி விஷமாகின்றது. பித்தத்துடன் சேரும் போது அதிகமாகியும் கபத்துடன் சேரும்போது குறைந்தும் போவதே வாயுவால் அக்னி விஷமநிலைஅடைவதற்குக் காரணம். வாயு அக்னியை மறைத்து அணைத்துவிடுவதன் மூலம் அக்னி மந்தத்தை ஏற்படுத்துவதையும், பித்தத்திலுள்ள தீக்ஷ்ணத் தன்மை குறைந்து திரவத் தன்மை மிகும்போது திரவத் திரவத் தன்மை காரணமாக அக்னி அணைந்து அக்னிமந்தம் ஏற்படுகின்றது. இதையே ஜதூகர்ண ஸம்ஹிதை மிகத்தெளிவாக எடுத்துக் கூறுகிறது.* வாயு கோபமடையும் போது காற்றால் தீபமணைவது போலும், பித்தம் கோபமடையும் போது வென்னீரால் நெருப்பணைவது போலும், கபம் கோமடையும் போது ஜலத்தால் நெருப்பணைவது போலும் ஜடராக்னி தன் சக்தியை இழக்கின்றது என்பதே ஜதூகர்ணரின் விளக்கம், உரைப்பு, ரூக்ஷ—உஷ்ணவீர்யமுள்ள பொருளால் தீக்ஷ்ணசக்தி மிகுந்து பித்தம் வளர்கின்றது. சிறிது உப்பும் ஸ்நிக்தமுமான உஷ்ண வீர்யப் பொருளை உபயோகிக்க கபத்தொடர்பு கொண்ட பித்தம் திரவமாக அதிகமாகின்றது. இந்த திரவமான பித்தமே அக்னி மந்தத்திற்குக் காரணமாகிறது.† தீக்ஷ்ணமான பித்தமல்ல. இவ்விதம் கபத்தொடர்பு கொண்ட வாயுவே அக்னிக்கு ஆவரணமாகி மறைத்து மந்தத்திற்குக் காரணமாகிறது. மற்

---

करोति कुपितो मन्दमग्निं संछाद्य मारुतः।

(சரக—வாதக்ரஹணீ சிகித்ஸை.)

* जतूकर्णेऽप्युक्तं– कुपितेन वायुना दीपस्येवाग्नेः निर्वापणं, पित्तेनोष्णजलवत्, कफेनांबुवत्—

—(மாதவநிதானத்தின் உரை மதுகோசத்தில் கையாளப்பட்டது.)

† ननु यदि तीक्ष्णः पित्तेनेत्युक्तं तत्कथं पित्तेनैवाग्नेः प्रशमनमभिधीयते।... उच्यते। यदा कटुकेन रूक्षोष्णेन पित्तं वृद्धं भवति तदा तेजोभागरूपतया पित्तस्यावस्थाया उल्बणत्वात्तीक्ष्णः पित्तेनेति संगतं भवति। यदाऽलवणेन स्निग्धोष्णेन कफानुगमनभाजा वृद्धं पित्तं तदा पित्तस्य द्रवावस्थायामुद्रिक्तत्वात् निर्वापणमग्नेरुक्तमिति।

(மாதவ நிதானத்தின் மதுகோச உரை.)

*றும் வாயுவால் அக்னி தன்னிடமிருந்து அகற்றப்பட்டு பலமிழப் பதாலும் பலக்குறைவு ஏற்படுகின்றது.**

*ஆக ஆமத்தின் காரணமான அக்னி மந்தத்தைப் பற்றி அறிவதன் மூலம் அவ்வக்னி மந்தத்திற்கு எந்த தோஷம் காரணம் என்றறிந்த பின்னரே ஆமம் வாதஜமா பித்தஜமா கபஜமா என்று பிரிக்கமுடியும். அதனல் அக்னிமந்தத்தில் இந்த தோஷ விசாரணை அவசியமாகின்றது.*

(தொடரும்)

## துர்ஜல ஜேதா ரஸம்.

ஸமுத்திரம் போன்று ஆழ்ந்தும் பரந்தும் காணப்படும் ரஸௌஷதக் கடலில் ரத்னங்களைப் பொறுக்கி எடுப்பதும் இது இது உயர்ந்ததெனக் குறிப்பிடுவதும் இயலாதது. ஆனல் பரம்பரையாக ஆண்டு அனுபவித்து வரும் ஔஷதங்களையாவது அறிந்து உபயோகிக்க முற்படுவது எளிது. பாரதத்தின் பல்வேறு பகுதிகளில் கையாளப்படும் ஔஷதங்கள் அனைத்தையும் ஒருங்கே தொகுத்து வெளியிடுவது இன்று மிகவும் உபகாரகமாயிருக்கும்.

கபவாதப் பிரதானமான நோய்கள் வருவதற்கேற்ற சூழ்நிலை தற்போது ஆரம்பமாகியுள்ளது. க்ரீஷ்மருதுவான ஆனி ஆடிமாதங்களில் ஸூர்யனின் தாபம் குறைந்து வாயுவின் வரட்சியும் நீர் சுமந்து வரும் மேற்கத்திய காற்றும் கபவாத நோய்களை உண்டாக்கவல்லன. இன்ப்ளுயன்ஸா போன்ற விஷஜ்வரங்களுக்கு இதுதான் உகந்த காலம். இந்த காலத்திற்கேற்ற நல்ல குணம் தரும் மருந்துகளில் திரிபுவன கீர்த்தி, கஸ்தூரிபைரவம் போன்றவைகளுடன் துர்ஜல ஜேதாரஸத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

பாவப்ரகாசத்தில் ஜ்வர சிகித்ஸாதிகாரத்திலுள்ள இந்த முறை வடதேசத்தில் வெகு லகுவாகக் கையாளப் படுகின்றது. முறை பின் வருமாறு—

---

* वायुश्चातिवृद्धत्वेन वह्नेर्निरासकः, तेनाग्निदीप्तिं न करोति। यत्र हि प्रेरकमात्रः भवति, वायुस्तत्रवह्नेर्वृद्धिं करोति। यथा- मेदस्विनः कोष्ठे चरन् वायुरग्निवृद्धिकरो भवति।

(சக்ரபாணியின் உரை. சரகஸூத்ரம் 21 அத்.)

विषं भागद्वयं दग्धं कपर्दं पञ्चभागकम् ।
मरिचं तगरञ्चैव चूर्णं वस्त्रेण शोधयेत् ॥
आर्द्रकस्य रसेनास्य कुर्यान्मुद्गनिभां वटीम् ।
वारिणा वटिकायुग्मं प्रातः सायं च दापयेत् ॥
अयं रसो ज्वरे योज्यः सामे दुर्जलजेऽपि च ।
अजीर्णाध्मानविष्टम्भशूलेषु श्वासकासयोः ॥

சுத்த வத்ஸநாபி 2 தோலா மிளகுத்தூள் 5 தோலா
சோழி பஸ்மம் 5 தோலா சுக்குத்தூள் 5 தோலா

இவைகளை இஞ்சிச்சாற்றில் அரைத்துப் பயறளவு (1 யவம்) மாத்திரை செய்து செய்துகொள்ளவும். 1—2 மாத்திரை தினம் 2 தடவை ஜலத்தில் கரைத்துச் சாப்பிட ஆமஜ்வரம், விஷ நீரால் ஏற்பட்ட ஜ்வரம், அஜீர்ணம், வயிற்றுப் பொருமல், மலக் கட்டு, சூலம், ச்வாஸம், காஸம் முதலிய உபத்ரவங்கள் இவைகளில் நல்லது.

இதிலுள்ள நான்கு சரக்குகளும் கப வாத சமனம் செய்பவை. வியாதி நிலைக்கேற்ப தேன், தசமூல கஷாயம், மஹாராஸ்னாதி கஷாயம், தசமூல கடுத்ரயாதி கஷாயம், தாருநாகராதி கஷாயம், பார்ங்க்யாதி கஷாயம் இவைகளுடன் கொடுக்கலாம். பெருவாரியாக தர்ம வைத்யம் செய்யுமிடங்களிலும் தொத்து நோயாக இன்ப்ளுயன்ஸா முதலியவை வரும்போதும் செலவு அதிகமாகாத நல்ல மருந்தாக இதை உபயோகிக்கலாம் திரிபுவன கீர்த்தி, கஸ்தூரி பைரவம் போன்ற மருந்துகளைப் போல விலையுயர்ந்த சரக்குகள், பாவனையில் சிரமம் முதலியவை இதில் இல்லை.

தீபனம், பாசனம், வலியைக் குறைப்பது, வியர்த்து உடல் கனத்தைக் குறைப்பது, ஜ்வர தாபத்தைக் குறைப்பது, தலை மார்பு மூக்கு முதலிய விடங்களில் நீரிளக்கம் ஏற்பட்டு வேதனை யுண்டாகும்போது நீரை வற்றச் செய்து வேதனையைக் குறைப்பது, வயிற்றில் உப்புசமும் மலக்கட்டுமிருப்பதைக் குறைத்து தமகச்வாஸம்—காஸம் போன்ற நிலைகளில் வியாதி வேகத்தைக் குறைப்பது, அஜீர்ணத்தைப் போக்குவது— முதலிய நல்ல குணங்களுக்காக எல்லா வைத்யர்களாலும் கையாளப் பட வேண்டிய நல்ல மருந்து இது.

இந்த மர்மத்தில் கீழ்க்கண்ட உறுப்பகுதிகள் அடங்கியுள்ளன. இது கட்டைவிரல்— ஆள்காட்டி விரல்களின் சலாகை எலும்புகளின் நடுவே உள்ளது.[1] உள்ளங்கை புறங்கைகளுக்குச் செல்லும் சுத்த ரத்தக் குழாய்கள் இங்கே கூடுகின்றன. அவையாவன :—

பஹி:[2] பிரகோஷ்டதமனியின் (முழங்கையிலிருந்து கட்டைவிரலுக்கு நேரே கையின் வெளிப்பகுதியில் வரும் ரத்தக் குழாய்) சலாகா பிருஷ்டிகா எனும் கிளைகளும் மற்ற கிளைகளும்.[3]

உள்ளங்கையில் வில்போன்று வளைந்து ஆழ்ந்து நிற்கும் கம்பீர—கரதல தாதுவஹீ எனும் ரத்தக் குழாய்.[4]

கட்டைவிரலை வெளியிழுக்கும் தசைநார்.[5]

கட்டைவிரலை உள்புறமாக மடிக்கும் தசைநார்.[6]

கை நடு நரம்பின் விரல்பகுதிக் கிளை.[7]

சலாகைகளின் நடுவிலுள்ள தசை.[8]

இவையாகும்.

இந்த இடத்தில் ஏற்படும் அடியால் அதிக ரக்த சேதம் ஏற்படலாம். அல்லது வலிப்பு, திமிர் ஏற்பட்டுக் கேடு விளையலாம்.

2. தலஹ்ருதய மர்மம் :— இது மாம்ஸமர்மம்; காலாந்தர ப்ராணஹரமர்மப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. உள்ளங்கையில் நடுவிரலிற்கு மேலுள்ளது. இங்கு குத்துப்பட, கடுமையான வலி ஏற்பட்டு மரணம் ஏற்படும்.[9]

---

1. Inter metacarpal space.
2. First dorsal metacarpal artery.
3. Branches of the Radial artery.
4. Deep volar arch.
5. Tendon of the abductor pollicis.
6. Tendon of the deep portion of flexor pollicis longus.
7. Digital branches of medium nerve.
8. first dorsal interosseous muscle.
9. मध्यमांगुलीमनुपूर्वेण मध्ये हस्ततलस्य तलहृदयं नाम। तत्रापि रुजाभिर्मरणम्।

*அமைப்பு :— உள்ளங்கையின் நடுவே கீழ்க்கண்ட உறுப்புப் பகுதிகள் கூடுமிடமாகும்.*

*உள்ளங்கையில் வில் போன்று வளைந்துள்ள ரத்தக் குழாயின் உள் வெளிக் கிளைகள்,*[1]

*உள்ளங்கைத் தசைநார்கள்.*[2]

*கட்டைவிரலை விரிக்கச் செய்யும் தசை.*[3]

*கட்டைவிரலை மடக்கும் சிறிய தசை*[4]

*சலாகைகளின் நடுவிலுள்ள தசைகள்.*[5]

*விரற்பகுதிகளை வளைக்கும் அட்டை போன்ற தசைகள்.*[6]

*இதில் அடிபட்டு வேதனை மிகுந்து திமிர் ஏற்பட்டோ அதிக ரக்தக் கசிவாலோ மரணம் ஏற்படலாம். ரக்த சேதம் ஏற்படாவிடினும், திமிர் ஏற்படா விடினும் மரணம் ஏற்படாது.*[7]

*க்ஷிப்ரத்திலும்*[8] *தலஹ்ருதயத்திலும் அடிபட்டு அதிக ரக்த சேதம் ஏற்படின் கைகளை மணிக்கட்டிற்குக்கீழ் வெட்டி எடுக்க*

---

1. Deep and Superficial volar arch.
2. Palmer apponeurosis.
3. Abductor pollicis.
4. flexor pollicis brevis.
5. Inter ossei muscles.
6. Lum bericales.

7. आमर्मविद्धोऽपि नरः छेदभेदादिपीडितः ।
अतिनिःसृतरक्तश्च सद्यस्त्यजति जीवितम् ।
अतोऽन्यथा जीवति तु विद्धः शरशतैरपि ।

8. क्षिप्रेषु तेषु सतलेषु हृतेषु रक्तं
गच्छत्यतीव पवनश्च रुजं करोति ।
एवं विनाशमुपयान्ति हि तत्र विद्धाः
वृक्षा इवायुधविघातनिकृत्तमूलाः ॥

तस्मात्तयोरभिहतस्य च पाणिपादं छेत्तव्यमाशु मणिबन्धनगुल्फदेशे ।
छिन्नेषु पाणिचरणेषु सिरा नराणां संकोचमीयुरसृगल्पमतो निरेति ।
प्राप्यामितव्यसनमुग्रमतो मनुष्याः संछिन्नशाखतरुवन्निधनं नयन्ति ॥

வேண்டியிருக்கலாம். அதனால் ரக்தக் குழாய்கள் சுருங்கி ரக்தக் கசிவு தடைபடும். கைகளின் வெட்டுப்பட்ட பகுதி சுருங்கிக் காய்ந்து விடும். உயிருக்கு ஆபத்து ஏற்படாது.

**3. கூர்ச்ச மர்மம் :—** க்ஷிப்ர மர்மத்திற்கு நேர் மேல் பாகத்தில் இது அமைந்துள்ள ஸ்நாயு மர்மம். வைகல்யகர மர்மப் பிரிவைச் சேர்ந்தது. நான்கு அங்குல நீளமுள்ளது. இதில் அடிபட கைகள் உதறல் சுழலுதல் ஏற்படும்.[1]

**அமைப்பு :—** கை விரல்களின் அடி சலாகை எலும்புகளுக்கும் கூர்ச்சாஸ்திகளுக்கும் பொருத்தம் ஏற்படுத்தும், தசைநார்கள் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன.

கட்டைவிரலை நீட்டச் செய்ய நீண்ட தசைநார்.[2]

விரல்களை நீட்ட உதவும் குறுகிய தசைநார்[3]

ஆள்காட்டி விரலை நீட்டும் தசைநார்.[4]

மணிக்கட்டை நீட்ட உதவும் தசைநார்.[5]

மணிக்கட்டை வளைக்க உதவும் தசைநார்.[6]

கையின் கட்டைவிரல் புறத்து (வெளிப்புறத்து) சுத்த ரக்தக்குழாயும் அதன் சலாகா பிருஷ்டா என்னும் கிளையும்.[7]

சலாகை எலும்புகளின் நடுவே உள்ள தசைகள்.[8]

கையிலுள்ள கூர்ச்சாஸ்திகளுக்கும் சலாகாஸ்திகளுக்கும் உள்ள பூட்டுகள்.[9]

---

1. क्षिप्रस्योपरिष्टादुभयतः कूर्चोनाम ।
   तत्र हस्तस्य भ्रमणवेपने भवतः । (ஸு. சா.)

2. Tendon of extensor Pollicis longus.
3. Tendon of extensor degetorum Communis.
4. Tendon of extensor Irdicis proprius.
5. Tendon of extensor carpi Radialis longus.
6. Tendon of the flexor Carpo Radialis Brevis.
7. Radial artery and its branches: first dorsal meta. corpal artery.
8. Interossious muscles.
9. Carpometacarpal and Inter metacarpal articulations.

இவை இம்மர்மவமைப்பில் கூடுபவையாகும். இவ்வமைப்பைக் கவனிக்கும்போது இதில் ஏற்படும் அடியினுல் உள்ளங்கையிலுள்ள நீண்ட எலும்புகளான சலாகாஸ்திகளுக்கும் குட்டை எலும்புகளான கூர்ச்சாஸ்திகளுக்கும் அவைகளை இயக்கும் தசைகளுக்கும் தசைநார்களுக்கும் ஆபத்து ஏற்பட்டு பூட்டுகள் குலைந்தோ தசைநார்கள் விலகியோ நசுங்கியோ பூட்டுகள் தளர்ந்து உதறல் வலி ஏற்படுவதன் காரணம் புலப்படும்.

4. **கூர்ச்ச சிரஸ் மர்மம்** :— மணிக்கட்டின் கீழ் இரு ஓரங்களிலும் உள்ள ஸ்நாயு மர்மம். ருஜாகரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடி ஏற்பட கடுமை வலியும் வீக்கமும் ஏற்படும்.[1]

அமைப்பு ; - மணிக்கட்டுப் பூட்டின் இருபுறங்களிலுமுள்ள தசைநார்கள்[2] இதில் முக்கியப் பங்கு பெறுகின்றன. இங்கு கூடும் உறுப்புகள் பின்வருமாறு—

உள்ளங்கை சலாகாஸ்தி நடுவே உள்ள தசைநார்.[3]

உள்ளங்கையில் குறுக்கே செல்லும் தசைநார்.[4]

சுண்டுவிரலுக்கு நேரே கையின் உட்புறத்தில் வந்து சேரும் ரத்தக்குழாய்.[5]

கை நடுவே வந்து சேரும் நரம்பு, கை உட்புற நரம்பின் மேற்புறத்துக் கிளைகள்.[6]

சலாகை எலும்புகளின் பூட்டுகள்.[7]

சிறு சிறு எலும்புகளும் அதன் பூட்டுகளும் பூட்டுகளை ஸ்திரப்படுத்தும் தசைநார்களுமாக உள்ள விடமாதலாலே ஸுலபமாக பூட்டு நழுவுதல், எலும்பு தடம்புரளுதல் போன்ற கெடுதி ஏற்பட்டு வலி மிகவும் ஏற்படும். மறுபடியும் தன் நிலைக்கு வந்தாலன்றி வீக்கம் வலி முதலியவை குறையாது.

---

1. मणिबन्धसन्धेरध उभयतः कूर्चशिरो नाम । तत्र रुजाशोथौ ।
2. Ulnar and Radial collatral ligaments. [(ஸு. சா.)
3. Intercarpal ligaments.
4. Transverse carpal ligaments.
5. Ulnar artery.
6. Median nerve and superficial branches of the ulnar nerve
7. Intercarpal articulations.

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருதலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

*சைனு பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் நிறுவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS,**

**MUSK MERCHANTS,**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனாமாக அனுப்பப் பெறும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்ப்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS.**

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.

LUDHIANA, PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.